தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம். (பொது) மற்றும் உலகவங்கி உதவி பெறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம் ஆகிய திட்டங்களில் சத்துண உட்கொள்ளும் 2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மாணவ மாணவிகளுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி – 3) துறை

அரசு ஆணை (நிலை) எண். 47 நாள் 13. 5.2005

படிக்கப்பட்டன:

1) அரசு ஆணை (நிலை) எண் 499 பிற்பட்டோர் நலம் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 26.5.89
2) அரசு ஆணை (நிலை) எண் 73 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 27.4.98
3) அரசு ஆணை (நிலை) எண் 95 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 16.4.2004
4) அரசு கடித (நிலை) எண் 50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 6.4.2005

:-:

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு மையங்களில் சத்துணவு உண்ணும் பயனாளிகளுக்கு 3.6.1989 முதல் முட்டை வழங்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டது. மேலே இரண்டு முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி தற்போது வாரம் ஒருமுறை சத்துணவுடன் சேர்த்து புதன்கிழமை அன்று 2 வயது முதல் 15 வயது வரையுள்ள பயனாளிகளுக்கு முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

2. இந்நிலையில், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலம் பயன் பெறும் 2 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு வாரம் இருமுறை சத்துணவுடன் சேர்த்து முட்டைகள் வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

33

3. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியோர் இத்திட்டத்தினை செயல் படுத்திட விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. சத்துணவு மையங்களில் சத்துணவு உட்கொள்ளும் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு தரமான முட்டைகள் வழங்கும் பொருட்டு ஏற்கனவே மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

5. இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

" 2236– சத்துணவு–02 சத்துணவு பானங்கள் வழங்கல் –102. மதிய உணவு –பத்தாவது ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் KI - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு புரதச் சத்துணவு வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் 67. உணவளிக்கும் உணவுச் செலவுகள் – 05 முட்டைகள்" (கு.தொ.கு.2236–02–102– KI-6753) 73. போக்குவரத்துச் செலவுகள் (கு.தொ.கு.2236–02–102– KI –7305)

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண் 1661/FS/P/2006 நாள் 13.5.2006 ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.என்.விஜயராகவன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள்– 3 வது திட்டம், சென்னை –113
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை– 15
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5
சமூக நல சிறப்பு ஆணையர், சென்னை –5
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை –3
ஆணையர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை –5
ஆணையாளர், அனைத்து மாநகராட்சிகள்
இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை –18
பள்ளிக் கல்வித்துறை இயக்குநர், சென்னை– 6
தொடக்கப்பள்ளி கல்வித்துறை இயக்குநர், சென்னை– 6
ஆதி திராவிடர் நலத்துறை ஆணையர், சென்னை– 5
பழங்குடியினர் நலத்துறை ஆணையர், சென்னை –5
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை –5
முதன்மை வனபாதுகாப்பு அலுவலர், சென்னை – 15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில கணக்காயத் தலைவர், சென்னை –18/9

மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை– 18/9 (பெயரில்)
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை சென்னை– 15
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்
அனைத்து கருவூல அலுவலர்கள்
சிறப்புப் பணி மற்றும் தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர், சென்னை –2
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சென்னை –10

நகல்
ஆளுநரின் செயலகம், சென்னை– 25
முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை– 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 9
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை– 9
பள்ளிக் கல்வித்துறை, சென்னை– 9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , சென்னை – 9
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
சென்னை– 9
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை– 9
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை– 9
நிதி (சநு/வ.செI/வ.செ. II)த்துறை, சென்னை– 9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை –9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7) துறை, சென்னை – 9
இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்